## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 14.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 9.11.2015 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், கெம்பகரை கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரபாகரன் என்பவரின் மகன் கோட்டீஸ்வரன்;

12.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், குச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகன் கருணாமூர்த்தி;

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் அருகே மதுரை தெற்கு, கான்பாளையத்தைச் சேர்ந்த திரு. ராஜகோபாலன் என்பவரின் மகன் ஆத்மாராவ்;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

12.11.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஐயம்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவா என்பவரின் மகள் மௌலிஸ்ரீ மழையின் காரணமாக மின்கசிவு ஏற்பட்டு மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தாள் என்ற செய்தியையும்;

13.11.2015 அன்று வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், துர்க்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மார்கண்டன் என்பவரின் மகன் முனுசாமி;

காஞ்சிபுரம் மாவட்டம், நத்தப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏகாம்பரம் என்பவரின் மகன் சின்னபையன்;

–– ஆகியோர் மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த மேலும் **6** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**